ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

வைத்தியக் கைம்முறை.

(முதற்பாகம்.)

இஃது

காரைக்குடி அநுபோகவைத்தியர்

அ. சௌமியநாராயணையங்காரால்

எழுதப்பெற்று

மோ. வே. கோவிந்தராஜ ஐயங்காரால்

பிரசுரம் செய்யப்பெற்றது.

வைசியமித்திரன் பிரஸ் பிராஞ்சு

காரைக்குடி.

1917

விலை ரூ. 0–2–0] [தபாற்கூலிவேறு.

பதிப்புரை.

அலைகடல் சூழ்ந்த இந்நிலவுலகில் மக்களாகிய நாம் தருமத்தில் முன்னேறுவதற்கு நமது உடலை முக்கிய ஸாதனமாக இருக்கிறது. ஆத்மதத்துவ சாஸ்திரங்களைக்கொண்டு ஆத்மாவைப் பக்குவப்படுத்தி நாம் முன்னேறுவதற்கு ஸாதனமாக்கிக்கொள்வதுபோல, தேஹதத்வ சாஸ்திரங்களை யுதவியாகக் கொண்டு தேஹத்தையும் தக்க ஸாதனமாக்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது. நல்ல சேர்க்கையைக் கொள்ளாதிருப்பதாலும் கெட்ட சேர்க்கையைக் கொள்ளுவதாலும் ஆத்மா தீமையடைந்து முன்னேற்றத்தில் தடைபட்டு நிற்பதுபோல, தேஹமும் நல்ல ஆகாரத்தைகொள்ளாததாலும் கெட்ட ஆகாரத்தைக்கொள்ளுவதாலும் கெட்டு, நமது முன்னேற்றத்துக்குத் தடையாகிநிற்கிறது. தீமனமுடைய ஆத்மாவை ஸத்சாஸ்திர சிரவணத்தாலும் ஸதாசார அநுஷ்டானத்தாலும் ஸத்கோஷ்டி ஸஹவாஸத்தா

னும் திருத்தியமைத்துக்கொள்வதுபோலத் தீமையடைந்த தேஹத்தையும் தேஹதத்வ சாஸ்திரங்களின் உண்மையறிந்த வைத்தியர்களுடைய உபதேசமொழிகளாலும் அவர்களது உள்ளன்புடன் கூடிய நோக்கத்தினுலும் அவர்கள் கையாண்டு அனுபவித்துக் கொடுத்த ஔஷதங்களாலும் திருத்தியமைத்துக் கொள்ளுகிறோம்.

ஆயினும் தேசாசாரானுஷ்டானங்களுக்கு ஏற்ப ஒருவன் பழக்கத்தைக்கொண்டு ஆத்மாவைத் திருத்திக்கொள்ளவேண்டியது அவசியமாவதுபோலவே, தேசசீதோஷ்ணஸ்திதிக்கு ஏற்பத் தக்கசாஸ்திரங்களின் உதவிகொண்டு தக்க ஔஷதங்களை யுட்கொண்டோமானுல், தேஹமும் திருந்தும். எனவே, இந்திய சீதோஷ்ணங்களினுலேயே வளர்ந்துவந்திருக்கிறோமாகையால், அப்படி வளர்த்தப் பட்டுயர்ந்த நமது தேகத்தை, நமது இந்தியசீதோஷ்ணங்களுக்கு ஏற்பச் சொல்லப்பட்டிருக்கும் ஆயுர்வேதாதி சாஸ்திரங்களின் உறுதியையே கைக்கொண்டு அதிற்புகன்றுள்ளபடியே ஔஷதங்களை யுட்கொண்டோ

லானல், இந்திய தேஹமான நமது உடலும் திருத்தி யமைக்கப்படும். இதற்கு மாறுபட்டால் ஒரு இந்தியன் இதரதேசத்தாசாரங்களில் பழகினபோது, தனது தேசாசாரங்களை யறவே கைவிட்டுத் தனது தேசத்துக்கு அவன் உரியவன் ஆகாதவாறு போல, தேஹமும் இதரதேசத்திற்குரிய ஔஷதங்களை யுட்கொள்ளும் தன்மையால், அத்தேஹம் குணப்படாமலும், அப்படி ஒருகால் குணப்பட்டது போலத்தோன்றினும், பிறகு இந்திய சீதோஷ்ணங்களால் அடிக்கடி தீங்கடைந்து வருந்துவதையும் நன்றாய் அனுபவமுறையில் காண்கிறோம்.

ஏற்ப, நமது முன்னோரும் வைத்தியமுறையின் எல்லாப்பாகங்களிலும் முன்னேறித் தக்க சாஸ்திரங்களை யனுபவமுறையாக இயற்றியுதவியிருக்கிறார்கள். அத்தகைய ஔஷதமுறைகளை நமது வைத்தியர்கள், எளிதில் யாரும் உணர்ந்து செய்துமுடித்து அருந்தும் பொருட்டு, உதவமுன்வருவாரேனும் ஸாதனக்குறைவால் முடிவுசெய்ய முடியாது இருக்கின்றனர். அந்தவிதமான குறையை நீக்குவதற்கு இது,

வே ஒருதக்கவழியாகுமென்று எளியன் சிறு மதியில் தோன்றி, வைத்தியர்களுடைய அநுபவ முறைகளைச் சிறுசிறு நூல்கலாகக் கொடுக்க உத்தேசித்து முயன்றுளேன். இந்த முயற்சிக்கு எல்லாம்வல்ல இறைவனும் எளியன்பால் கருணையுள்ள பெரியோரும் உதவிபுரிவாரென்ற திண்ணமான எண்ணத்துடன் அவ்வகையில் முதல்நூலாகிய இதனை வெளியிட்டுளேன்.

மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

முகவுரை.

பாரதமாதாவின் பண்புடைத் தவத்தாற் பிறந்த புண்யர்காள்! கவனியுங்கள்! நம் நாட்டில் சிறப் புற்று வாழ்ந்த ஆயுர்வேதம் என்னும், எவ்வுயிர்கட் கும் பிணி நீங்கி ஜீவாதாரமாகும், இந்நூலின் பெரு மையை, இக்கால் பிறர் குறைக்க நினைப்பானேன்? நாம் கவனமொடு கையாடாக்குறைவேதான்.

ஆகலின் செய்யப்புகும் எவ்வௌஷத முறை களையும் நாம் செவ்வனே ஆராய்ந்து செய்து, உப யோகித்துவரின், முப்பாற்பலனையும் யடையலா மென்பது திண்ணம்.

ஆயுர்வேத சாஸ்திரங்களைப் படித்து மனச் சுத்தியோடு தாதுப்பொருளினுடையவும் ஔஷதச் சரக்குகளினுடையவும் சுத்திமுறைகளைத் தெரிந்து கொண்டும் கைபாகம் என்னும் செய்

பாகம் தவறாது செய்யின், எப்பிணியையும் அறவே நீக்கலாகும் என்பதும் திண்ணம்,

தென்மொழியில் அநேக வைத்திய நூல்கள் செய்யுள் வகையாக உலகில் உலாவினும் அச்செய்யுட்களும் அப்பாஷைக்குரிய விரிவுடைப்பொருள் தரக்கூடியனவாகையால், அவரவர்கள் படிப்புக்குத் தகுந்தவாறு பொருள்கள்செய்து ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையாக ஔஷதங்களை முடித்துக் கையாண்டு வருகின்றனர். இது, நகரங்கள்தோறும் ஆயுர்வேத கலாசாலையில்லாக்குறைவால் நேருவது.

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனால், அகில ஆத்மகோடிகளும் பிணியினின்று பிழைத்தற் பொருட்டு, தக்ஷப்பிரஜாபதிக்கு உபதேசிக்கப்பெற்றும், பின் அவரிடமிருந்து அச்வநீ தேவதைகள் இந்திரன் ரிஷிகள் சிஷ்யவர்க்க பரம்பரையாகக் கற்றுக்கொண்டும், அவ்வகையோடு கற்றறிந்தமகான்களால் எழுதிவைக்கப்பெற்றுமுள்ள ஆயுர்வேத க்ரந்தங்களுக்கோவெனில், குறையேதுமிலது; உண்டென்று சொல்லினுமொவ்வாது.

மேற்கூறிய ஆயுர்வேத க்ரந்தங்களையே மறுதேசத்தார்பலர் பலவாண்டுகளுக்கு முன்னமே இங்கிருந்து தம் தேசங்கட்குக் கொண்டுபோய் பல பாஷைகளில் மொழிபெயர்த்து வெவ்வேறு பெயரிட்டு வழங்கிவருவதாகவும் தெரிகின்றது.

நம் ஆயுர்வேத க்ரந்தங்களைத் தெரிந்தோர் மாட்டுக் கற்றுணர்ந்துகொண்டு அதன்படி நம்மிந்திய சகோதரர்களும் ஔஷதங்களை முடித்து உலகுக்குதவிபுரிவாரெனில், எவரும் குறைகூறுர் என்பது நிச்சயம்.

இதைக்கருத்துட்கொண்டே நாகரிகம் வளர்ந்தோங்கும் இக்காலத்தில், யாவரும் எளிதில் உணர்ந்து செய்துகொள்ளும்படி பரோபகார தர்மமே உருவாய்க்கொண்ட படித்த பிரமுகர்கள் ஆயுர்வேத க்ரந்தங்களை ச்லோகானுபூர்வகமாய் தமிழில் மொழிபெயர்த்துப் புஸ்தகரூபமாகவும் மாதாந்த பத்திரிகைகள் வாயிலாகவும் வெளியிட்டு வருகிறுர்கள். இக்கிரந்தங்களில் சென்னை ஆயுர்வேத பூஷணம் பண்டிதர் எம். துரைஸ்வாமி அய்யங்கார்

அவர்கள் மொழி பெயர்த்திருக்கிற சார்ங்கதர ஸம்ஹிதையும் அஷ்டாங்க ஹிருதய உரையுடன் கூடிய வைத்தியகலாநிதிப் பத்திரிகையும் கவனிக்கற்பாலனவே.

அப்பத்திரிகையினும் அனுபவத்திற் சிறந்த கையாளும் முறைகள் சிலர் எழுதிப் பிரசுரித்து வருவதால், யானும் என் அனுபவத்திலுள்ள சில முறைகளைச் சிறு புத்தகரூபமாக எழுத எண்ணினேன்.

எவரும் பிணியாளியைப் பலவிதசோதனைகளால் பரீட்சை செய்து உற்றநோயைத் தெரிந்து கொள்ளாது பண்டிதஞ்செய்யக்கூடாது. நோயின் வரலாறு சரீரக்கூறுபாடு காலம் இடம் தன்மை இவற்றைக் கவனித்தே பண்டிதஞ்செய்ய முயல வேண்டும்.

அ. சௌமியநாராயணையங்கார்.

ஸ்ரீ:

வைத்தியக்கைமுறைகள்.

—(:)◡(:)—

ஔஷத முறைகள்.

மதாருஸன்கான்சாயபு என்பவரால் எம் முன்னுளோர்க்கு எழுதிக்கொடுக்கப்பெற்று அவர்களால் எனக்குக்கிடைத்து என் அநுபவத்தில் குணங்கண்டதுமான

1. கஸ்தூரி ஹல்வா.

காயிதழ் மத்தியிலுள்ள அரிசி காம்பு நீக்கித் தங்க நிறமொத்திருக்கும் ஆவாரம் பூவினிதழ் நிழலிலுர்த்திப் பாடஞ்செய்தது:-	தோலா	1
நிழலிலுலர்த்திய ஒரிதழ்த்தாமரை ஸமூலம்	,,	1
இலவம்பிசின்	,,	1

கோரைக்கிழங்கு	தோலா	1
நிலப்பனைக்கிழங்கு	,,	1
பூமிச்சர்க்கரைக்கிழங்கு	,,	1
அச்வகந்திக்கிழங்கு	,,	1
பூனைக்காலிவிரைப்பருப்பு	,,	1
ஆலம்விதை	,,	1
நத்தச்சூரிவித்து	,,	1
துத்திவித்து	,,	1
நீர்முள்ளிவித்து	,,	1
பூநீக்கிய லவங்கம்	,,	1
சன்ன லவங்கப்பட்டை	,,	1
சோம்பு	,,	1
சீரகம்	,,	1
சாலாமிசரி	,,	1
குங்குமப்பூ	வீராகனிடை	$\frac{1}{4}$
கஸ்தூரி	,,	$\frac{1}{8}$
சீனாக்கற்கண்டு	சேர்	1
நயம் தேன்	படி	$\frac{1}{8}$
தேங்காய்		1

செய்யும் வகை.

1 முதல் 17 வரையிலுள்ள சரக்குகளை வெயி
லில் வைத்து உரலிலிடித்து வஸ்திரகாயம் செய்து
குங்குமப்பூ கஸ்தூரி இரண்டையும் சேதம் போகா
மல் பொடிசெய்து முன் சூரணத்துடன் சேர்த்து,
ஒன்றுபடக் கலந்துகொண்டு முற்றின தேங்காயின்
கண் திறந்து அதிலுள்ள நீரைக்கொட்டிவிட்டு அத்
தேங்காய்க்குள் சூர்ணங்களையடைத்து அடைத்த
வாய்க்குக் காரக்கிட்டு தேங்காயின்மேல் 5 சீலை மண்
செய்து 10 வறட்டியின் மத்தியில் தேங்காயை
வைத்துப் புடமிடவும். அருகிலிருந்து தேங்காயை
நாற்புறமும் புரட்டிக்கொடுத்து எப்பக்கமும் தேங்
காய்ச் சிறட்டைச் சமமாகக்கருகும்படிசெய்து உள்
ளிருக்கும் தேங்காய் மருந்துகளில் நெருப்புப்பற்ற
விடாமல், பாகமானவுடன் தேங்காயை நெருப்பி
லிருந்து எடுத்துக்கொண்டு, சூடாறியவுடன்
சிறட்டை நீக்கிப்பார்த்துத் தேங்காய் கருகியிருந்
தால்கத்தியினால் சுரண்டிவிட்டுத் தேங்காய் சூரணம்
அனைத்தையும் கற்கண்டுடன் கல்லுரலிலிட்டு மெழுகு

பதமாகும்வரை யிடித்துத் தேனிற்போட்டுக்குழப்பி டப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

இதைக்காலை மாலை அரைரூபாயிடை விதம் 20 நாள் சாப்பிடத்தீரும் வியாதிகள்:—ரோகமுள்ள ஸ்திரீகளின் ஸகவாஸத்தால் உண்டாகும் மேக ரோகமாகிய வெள்ளை விழுதல் நீர்க்கெடுதல்கள் இவைகளைப்போக்கித் தாது விருத்தியைச்செய்யும்.

குறிப்பு:—சில லேகியங்கள் தாது புஷ்டிக்கென்று செய்து வருவதில், போதையைத் தருவனவான ஜாதிக்காய் காமப்பூ கஞ்சா அபின் இவைகள் சேர்த்துச் செய்யப்பட்டுவருவதால், சாப்பிடுஞ் சமையம் ஒரு விதமான தெம்பைக் கொடுத்துப்பின் எதிரிடையான குணத்தையே கொடுத்துக்கெடுதல்கள் செய்கின்றன. இங்குக் கூறிய லேகியத்திலோவெனில், அவ்விதமான போதைச்சரக்குகள் சேர்ந்திராததுடன் உஷ்ணத்தை நீக்கக்கூடிய ஆவாரம் பூவினிதழ் ஓரிதழ்த் தாமரை இலவம்பிசின் மூன்றும், மலத்தைக் கிரமமாய் நீக்கக்கூடிய தேங்காயும்,

தாதுபுஷ்டிக்கு உத்தமமாகக்கூறுகின்ற தங்கம் அம்பர் கஸ்தூரி மூன்றினுள் நரம்புகளைத் தளரவிடாது கெட்டிப்படுத்தும் கஸ்தூரியும் முக்கியமான மற்றச்சரக்குகளும் சேர்ந்திருக்கின்றன. ஆகையால் இந்த லேகியத்தின் அருமையை, செய்து சாப்பிட்டு அனுபவத்திலே தெரிந்து கொள்ளலாம். பத்தியம்:— வாயு பதார்த்தம் நீக்கி இச்சாபத்தியமும் மனவுறுதியுமாகும்.

எனது மித்திரரும் ஆயுர்வேத கலாசாலையில் படித்துத் தேர்ச்சிபெற்றவருமான M. V. இராமஸ்வாமி அய்யங்கார் அவர்களால் எனக்குக் கிடைக்கப் பெற்ற அனுபவமான இரண்டுமுறைகள்.

2. லாக்ஷாக்ருதம்.

சுக்கு	பலம்	1
அரிசித்திப்பிலி	,,	1
கொம்புநீக்கிய அரக்கு	,,	1
பசுவின் நெய்	சேர்	$\frac{3}{4}$

மூன்று சரக்குகளையுமிடித்து ஒரு படி சுத்த ஜலத்தில் சேர்த்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து எட்டிலொன்றாக வற்றியவுடன் இறக்கி வடிகட்டிக் கொண்டு, அக்கஷாயத்தில் நெய்யைச்சேர்த்து ஒன்று படக்கலக்கி அடுப்பேற்றிக்கமலாக்கினியாக எரித்துக் கைவிடாது கரண்டியினால் துழாவிவர நீர்வற்றி நெய்வெளிவந்து தெளிவாகி நல்லவாசனை வருஞ்சமயம் இறக்கி ஆறியவுடன் வடிகட்டிப் பழகிய மண் கலயம் ஈயப்பாத்திரம் இவற்றில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

---

3. கற்பூர சிலாஜித் பஸ்மம்.

கடைகளில் பளிங்குபோல் விற்கும் கர்ப்பூர சிலாஜித் சேர் 1 வாங்கி சிறுதுண்டுகளாகவுடைத்துக் கொண்டு காற்படி பசுவின்பாலில் மேற்படி துண்டு களைப்போட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து, பால் சுண்டியதும் இறக்கி நன்றாகக் கழுவி காய வைக்கவும். பின்னும் அத்துண்டுகளை ஒன்றொன்றாய் தூக்கிப் பார்த்து மத்தியில் வேறு நிறம் மண் முதலி

யவை பற்றியிருந்தால், கத்தியால் போக்கிவிட்டு ஒரு படி அளவுள்ள மண்கலயம் ஒன்றில், (குமரி)கற்றாழையின் பெருமடலாக எடுத்து மேற்பாகம் நீக்கி மத்தியிலுள்ள சோறு என்னும் பாகத்தை, அரைக் கலயம் அமுக்கி அதன்மேல் சுத்தி செய்திருக்கும் சிலாஜித்தை வைத்துப் பாக்கிக் கலயத்துக்கும் கற்றாழையின் சோற்றைக் கலயத்தின் வாய்வரை யமுக்கிக் கலயத்தின் வாய்க்குச் சரியான ஓடு தேப்த்து மூடி சீலைமண்செய்து காயவைக்காமல் உடனே காட்டு வறட்டி 70 அடுக்கி மத்தியில் கலயத்தைவைத்துப் புடமிடவும். புடம் குளிர ஆறியவுடன் கலயத்தை எடுத்து திறந்துப்பார்க்க நீறியிருக்கும். அதைக் கல்வத்தில் பொடிசெய்து சீசாவில் அடைத்துக் கொள்ளவும்.

உபயோகம்.

சீதபேதி (வயிற்றுக்கடுப்பு) மலத்துடன் இரத்தம் விழுதல் இரத்த வெட்டை இவைகட்கும், குழந்தைகட்கு மலத்தில் இரத்தம் காணும் கணைக்கும், வீசம்படி பாலைக் கொதிக்கவைத்து இறக்கிக்

கொண்டு முற்கூறிய லாக்ஷாக்ருதத்தில் பெருந் தேற்றாங்கொட்டையளவு போட்டுச் சூட்டுடன் கலக்கி கர்ப்பூர சிலாஜித்து பஸ்மத்தில் கால் விராகனிடையும் அதிற்போட்டுக் கொடுக்க குணமாகும். மூன்றுநாள் ஆறுவேளை காலைமாலை கொடுக்கவும். பத்தியம்:—அதிக காரம் கூடாது; வாயுபதார்த்தம் நீக்கவும்.

ஷை கர்ப்பூர சிலாஜித்து பஸ்மத்தை வேறுவித உஷ்ண ரோகங்கட்கும் பசுவின் வெண்ணெயில் கொடுக்கலாம்.

குறிப்பு:—வயிற்றுக்கடுப்புக்கு இது ஒரு மருந்தே நல்ல முறை என்று என் அனுபவத்தில் கண்டதுடன், ஆயுர்வேதத்தின் பெருமையையும் தெரியலானேன். நம்மவர்கள் சீதபேதி கண்டவுடன் மாதுளம்பிஞ்சு தயிருடன் வெந்தயம் இவற்றைச் சாப்பிடுகிறார்கள். அது சில தேகத்திற்கு ஒத்திருந்தாலும் சில தேகத்திற்கு மலத்தை அதிகப்படுத்துகின்றது. லாக்ஷாக்ருதமோ சரக்கு மூன்றேயாயினும்,

ரிஷிகள்ரோகத்தின் நிதானமறிந்து மூலத்தில் வாயு தங்கி ஏற்படும் இந்த ரோகத்திற்கு, இதுவே உற்றதென்று கண்டு எழுதியிருப்பதால், ஆயுர்வேத முறைப்படி கடைச்சரக்குகளையே வாங்கி அதிகக் கஷ்டமில்லாமல் கஷாய மூலமாகவே அனேக ரோகங்களை தீர்த்துக் கொள்ளலாமென்பதும் எம் துணிபு.

---

4. ஸாலாமிசரி ஹல்வா.

சீமை வாதுமைப் பருப்பு	சேர்.	1.
பஞ்சாப் ஸாலாமிசரி	,,	$\frac{1}{2}$.
சீனாக்கற்கண்டு	,,	3.
குங்குமப்பூ	விராகனிடை	$\frac{1}{2}$.
பசுவின் நெய்	படி	$\frac{1}{8}$.
பசுவின் பால்	,,	$1\frac{1}{2}$.

வெந்நீரில் இரண்டுநாழிகை ஊறவைத்துத் தோல் நீக்கிய வாதுமைப்பருப்பு சேர் ஒன்றையும், சுத்தியால் சிறு தூளாகவுடைத்த ஸாலாமிசரியை

யும் காலை 6-மணிக்குக் கலப்பில்லாத பசும்பாலில் அழுங்கி ஊறும்படியாகப் பால் விட்டு ஊறவைத்து, மாலை $4\frac{1}{2}$ அல்லது 5-மணிக்குக் கல்லுரலிலிட்டு மைபோலரைத்துக்கொண்டு இருப்புச் சட்டியிற்போட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து அடிப்பிடியாமல் துடுப்பினால் கிளரிக் கெட்டியாய் வரும் சமயம் கற்கண்டைத் தூள் செய்துபோட்டுக் கிண்டச் சிறிது இளகும். அச்சமயம் குங்குமப்பூவையும் கொஞ்சம் ஜலத்தில் அரைத்துச் சேர்த்து மறுபடியும் கிளரி நெய்யையும்சேர்த்து, இளம் அல்வாப் பதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு, வேளை 1-க்கு எலுமிச்சம்பழ அளவு காலை மாலை சாப்பிட்டுப் பால் அல்லது வெந்நீர் சாப்பிட்டுவரவும்.

தீரும் நோய்கள்:—புகைந்து புகைந்து இருமுதல் வாய்ப்புண் உந்திப்புண் இவைகள் தீருவதுடன் தேகத்திற்கும் வன்மையைக்கொடுக்கும். அனுபவமுறை.

5. கஸ்தூரி மாத்திரை,

மிளகு	விராகனிடை	3.
மிளகாய்	,,	3.
அக்கிராகாரம்	,,	3.
சுக்கு	,,	2.
வால்மிளகு	,,	2.
வெங்காரப் பொரி	,,	2.
வத்ஸநாபி	,,	2.
வெள்ளைக் குங்கிலியம்		1.
கஸ்தூரி	,,	1.

இதில் நாபியைச் சிறுகீரைச் சாற்றில் 3-நாள் ஊறவைத்து வெயிலில் காயவைத்துப் பொடி செய்து நிறுத்துக் கொள்ளவும். வெங்காரத்தைச் சாணிப்பாலில் கொதிக்கவைத்து சுத்தி செய்து காயவைத்து நெருப்பில் இருப்புச் சட்டியைக் காய வைத்துக் கீழிறக்கி வெங்காரத்தைப் போட்டுப் பொரித்து மேற்கண்ட இடைப்படி நிறுத்தெடுத்துக் கொள்ளவும், வெள்ளைக்குங்கிலியத்தை இளநீரில்

மூன்றுதரம் கொதிக்க வைத்துச் சுத்திசெய்து கொள்ளவும். பிற்பாடு 9 சரக்குகளையும் நன்றாக நிறுத்துக் கொண்டு கல்வத்திலிட்டு கரிப்பான்சார் விட்டு மூன்று ஜாமமரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:—குழந்தைகளுக்கு முலைப்பால் ஸ்வரஸம் இவற்றிலும் பெரியவர்களுக்கு வெற்றிலையிலும் வயதளவை நிதானித்து மாத்திரைகளை 1 முதல் 3 வரை கொடுக்க. ஜ்வரம் கணைக்கழிச்சல் மாந்தம் பொருமல் அஜீரணம் இசிவு இவை தீரும்.

---

6. பூனைக்காலிவித்து க்ருதம்.

புதிதாகவுள்ள பூனைக்காலிவித்தை இரவில் பச்சைத் தண்ணீரில் போட்டு ஊறவைத்து காலையில் தோல் போக்கிக் காயவைத்து இடித்து வஸ்திரத்தி. ல் வடிகட்டிய தூள் தோலா 5.

		ரூபாயிடை,
நிலப்பனைக்கிழங்கின் தூள்		5.
சீனி		10.
பசுவின் நெய்	சேர்	2.

மூன்னிரண்டு தூளையும் காற்படி ஆவின்பாலும் சமன் தண்ணீருமாய்க் கலந்து பானையில் விட்டு வாயை வெள்ளை வஸ்திரத்தினால் வேடு கட்டி அதன்மீது ஷை தூள்களைப்பரத்தி மேல் பொருத்தமாக மண்பாண்டத்தால் மூடி அடுப்பேற்றி உள்ளிருக்கும் பால் நீர் வற்றும்வரை எரித்துப் புட்டவித்து எடுத்துக்கொண்டு நெய்யை அடுப்பேற்றிக் காய வைத்துச் சீனி புட்டவித்த தூள்களையும் போட்டுக் கிண்டி சிறு தீயாகவெரித்து அடிப் பிடியாமல் பதமாக இறக்கிவைத்துக்கொள்ளவும்.

வேளை 1-க்கு தேக்கரண்டியளவு சாப்பிட்டு வரவும். பித்தகாங்கையைநீக்கிச்சுக்லத்தைக் கட்டும்.

---

7. நீரழிவுக்கு லேகியம்.

முற்றினநாவற்பட்டை பலம் 10.

சுக்கு, திப்பிலி, மிளகு, வால்மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, சிறுநாகப்பூ, வாய்விடங்கம், சீரகம் வகைக்கு பலம் $\frac{1}{2}$. வெல்லம் பலம் 5.

நாவற்பட்டையைப் பஞ்சுபோலிடித்து 4-படி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து எட்டில் ஒன்றாகக் காய்ந்தபின் இறக்கி வடிகட்டி அதில் வெல்லத்தைக்கரைத்து வடிகட்டி அடுப்பேற்றிப் பாகுபதத்தில் 2 முதல் 11 வரையிலுள்ள சரக்குகளை வெயிலில்காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்த தூள்களைப் போட்டுக் கிளரி பசுவின்நெய் படி $\frac{1}{8}$ விட்டுக்கிளறி மெழுகு பதத்திலிறக்கி ஆறியவுடன் தேன் சேர் அரை சேர்த்து பிசைந்து டப்பியில் வைத்துக் கொண்டு வேளையொன்றுக்கு அரை ரூபாயிடை லேகியத்தில் அப்ரகசிந்தூரம் பணவிடை ஒன்று வைத்துச் சாப்பிட நீரிழிவு தீரும்.

---

8. ரசகெந்தக மெழுகு.

சுத்திசெய்த கெந்தகம்	பலம்	$\frac{1}{2}$
ரஸ செந்தூரம்	விராகனிடை	$2\frac{1}{2}$
ரஸகர்ப்பூரம்	,,	$2\frac{1}{2}$
லிங்கம்	,,	$2\frac{1}{2}$
தாளகம்	,,	1
மனோசிலை	,,	1
ரஸம்	பலம்	$\frac{1}{2}$
நாலாங் காய்ச்சல் வெடியுப்பு	விரா	$2\frac{1}{2}$
பரங்கிப்பட்டை	பலம்	1

1. இதில் பரங்கிப் பட்டையைப் பாலில் அவித்து வெயிலில் காயவைத்து இடித்து வஸ்திர காயஞ்செய்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

2. கெந்தகத்தைச் சமனிடை பசுவின் நெய் விட்டு இருப்புக்கரண்டியில்உருக்கிக்கெந்தகம்அமுங் கக்கூடிய பாலில் உருக்கிச் சாய்க்கவும். இவ்விதம் 10 அல்லது 7 தடவை செய்யவும். பின் மிளகுதக் காளிச் சாறும் வெறுந்தக்காளிச் சாறும் சமன்

கலந்து அதில் மூன்றுதடவை உருக்கிச் சாய்க்கவும். ஒவ்வொருதடவையிலும் நெய்சேர்த்தே கந்தகத்தை உருக்கவேண்டும். இவ்விதம் செய்யக்கந்தகம் நாற்றமில்லாது சுத்தமாகின்றது.

உலாந்தாலிங்கம் ஒரு பலம் வாங்கி வெள்ளைப் பீங்கான்கோப்பையில் வைத்துக் கட்டியமுங்கும்படியாக எலுமிச்சம்பழச்சாறு விட்டு 7-நாள் வெயிலில் வைத்தும், பின்நாகதாளிஎன்றசப்பாத்துப்பழச்சாறு விட்டு 7-நாள் வெயிலில் வைத்தும், பின் கசப்பு கச்சந்திரா அல்லது வேப்பிலையின் சாறுவிட்டுக் கல்வத்திலரைத்து எடுத்துக் காயவைத்துச்சட்டியின் அடியில் கொடிவேலி வேர் சூர்ணம் போட்டு அதன்மேல் உலாந்தாலிங்கம் அரைத்ததைப்பொடிசெய்துபோட்டு மேற்சட்டி மூடி அரவை மண்ணால் 5 சீலைமண் செய்துகாயவைத்து அடுப்பேற்றி 2சாமம் கடுந்தீயாய் எரித்துஆறவைத்து மேற்சட்டியில்படிந்திருப்பதைப் பன்றிமயிர்க்கட்டால் துடைத்து வரும் ரஸத்தை வெள்ளைத் துணியில் வைத்து நான்கு ஐந்து தரம் பிழிந்து பலம் அரை நிறுத்து எடுத்துக்கொள்ளவும்

ரஸ கர்ப்பூரத்தைப் பிள்ளைப்பாலில் 3-நாள் ஊற வைத்துக்கழுவி எடுத்துக்கொள்ளவும்.

கேசரி (சமூதை) நீரில்வெடியுட்டைக் கரைத்து அதில் தாளகத்தைப் போட்டுக் கொதிக்கவைத்து 13-நாள் புதைத்துவைத்து எடுத்துக்கொள்ளவும். இவ்விதம்செய்ய மற்றமருந்துகளுக்கும் உதவும்படி அதிலுள்ள எண்ணெய்சுக்கிச் சுத்தமாகும்.

ரஸசெந்தூரம் மஞ்சிலே லிங்கம் மூன்றையும் அரைக்காற்படிப் பாலே கொதிக்கவைத்து இறக்கிக் கொண்டு அதில்போட்டு ஒரு ஜாமம் சென்று எடுத்துக்கொள்ளவும்.

சுத்திசெய்த சரக்குகளை மேற்கண்டபடி இடை வீதம் நிறுத்துக்கொண்டு கல்வத்தில் மூன்றுடி கந் தகத்தைச் சேர்த்தரைத்து அதன்பின்னுல் ரஸத் தைவிட்டு அரைத்து இரண்டையும் நன்றுயரைத்துக் கொண்டு பின் பரங்கிப்பட்டைச் சூரணம் நீங்கலாக மற்றச் சரக்குகளைப்போட்டு ஒருசாமம் தாளகத்தின் தளுக்கு இல்லாதவரை அரைத்து அப்புறம் பரங்கிப்

பட்டைச்சூரணம் சேர்த்தரைத்து சீசாவிலடைத்து வைத்துக்கொள்ளவும்.

வேண்டும்சமயம் கொஞ்சம் மேற்படி சூரணத்தைக் கல்வத்திலிட்டு பசுவினெய் விட்டு மெழுகு போலரைத்து அனுபானத்தில் கொடுக்கவும். சகல ரோகமும்தீரும். கைகண்ட அனுபவம்.

தீரும்வியாதிகள்.

கள்ளிப்பூக்கிரந்தி கருங்குஷ்டம் வெண்குஷ்டம் இவைபோன்ற மேகவியாதிகட்குச் சீனியில்.
வெட்டை நீர்ச்சுருக்கு சூலை இவைகட்கு நெய்யில்.
ஜ்வரங்கட்குத் தேனில்.
வாயுக்கட்குத் திரிகடுகுச்சூர்ணத்தில்.
இன்னும் மற்றுமுள்ள வியாதிகட்குத் தகுந்த அனுபானங்களில் கொடுக்கத்தீரும்.

மெழுகு உள்ளுக்குச்சாப்பிடும் அளவு.
பட்டாணிக்கடலை யளவு சாப்பிடவும்.

வாய்பிடிக்காது. சிறுகுழந்தைகளுக்குக்காணும் கருங்கிரந்தி செங்கிரந்தி கடுவன் முதலியவற்றுக்

கும் கொடுக்கலாம். அவரவர்கள் யுக்தம். ஆறுநாள் பன்னிரண்டுவேளை கொடுக்கக்குணமாகும். பத்தியம் சௌகரியம்போல். இச்சாபத்தியமிருக்கவேண்டியது அவசியம்.

குறிப்பு.

சிலர் பிரசுரங்களில், ரஸ பாஷாணகந்தகாதிகள் சேராத மருந்தென்றும், சேர்ந்தாற் கெடுதல்கள் போலும் எழுதிவருகின்றனர். ரிஷிகள் சித்தர்கள் ஆயுர்வேத க்ரந்தங்களில் கர்ம ரோகாதிகளுக்குப் பஞ்சபூதச் சரக்குகளாகிய மேற்குறித்த சரக்குகள் சேராமல் நோய் விலகாவென்றே எழுதியுள்ளார்கள். இருந்தாலும் இச்சரக்குகளை கையாள்வோர் கவனமோடு பிரயோகிப்பதே உத்தமமென்பதை யாவரும் உண்மையென்று நம்பி நடக்கவேண்டியவராகின்றோம். ஆனாலும் இச்சரக்குகள் சேர்ந்தால்தான், சீக்கிரம் ரோகங்களைக்குணத்துக் குக்கொண்டு வருவதுடன் ரோகத்திற்குக் காரணமாகிய கிருமிகளை அழிப்பதற்கும் பலமான ஔஷதங்கள் முடிக்கக்கூடினவையாகவும் இருக்கின்றன. இக்தந்தகபதங்

கத்திறலே சந்நிபாதஜ்வரங்கள் குணமானதாக பாரிஸ் நகரத்தில் தீராபுடிக் ஸொஸைடி வைத்திய சங்கக்கூட்டத்தில் கொப்யூ என்னும் சாஸ்திரக்ஞர் கந்தகபதங்கத்தை ஜிலாடின் என்னும் பசையினுல் செய்த சிறிய டப்பிக்குள் 15-கிரைன் அளவில் தினமொன்றுக்கு ஐந்தாறு முறை உள்ளுக்குக்கொடுத்துவந்ததாகவும், ஸந்நிபாதஜ்வரத்தின் வேகம் வெகுசீக்சிரத்தில் தணிந்து பிணியாளியின் முகம்தெளிவடைந்து சீக்கிரம் சுகம் பெற்றனரென்றும், கந்தகத்துக்குத்தோஷஹரப்(கிருமிஹரம்) முதலானவீர்யம் இருப்பதால் இவ்விதமானவேலையைச்செய்கிறதென்றும், அவர் விவரித்துக்கூறியிருக்கிறரென்றும், வைத்தியகலாநிதி ராக்ஷஸ-வருஷ புரட்டாசி-மீ ஸஞ்சிகை 43-வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சித்தர்களும் கிருமி ஸம்பந்தமான குஷ்டரோகங்கட்கும் கந்தகமெழுகு கந்தகதைலம் கந்தகபஸ்மம் சுன்னம் இவைகளையே உபயோகிக்கும்படி எழுதியிருக்கிறர்கள். இக்காலத்தில் கந்தக பாஷாணம் ரஸமருந்துகளென்று குறை கூறு

வோர்க்கே அந்தப் பத்திரிகை எடுத்துக்கூறுகிறது. ஆகையால் மேல்நாட்டார் பசை டப்பிகள் செய்து அதற்குள் மருந்தை அடைத்துக் கொடுப்பதுபோல், நம் நாட்டினும் அதிவீர்யமுள்ள மருந்துகளைப்பல் நாக்கு இவற்றில் படாமல் கருப்பட்டி வெல்லம் லேகியம் பட்டைகள் அரைத்தகல்கம் இவற்றில் பொதிந்து (மறைத்து) சிறு உருண்டையாய் உருட்டி அடித்தொண்டையில் போட்டு விழுங்கும்படி எழுதியிருப்பதுடன் அனுபவத்திலும் நடந்துவருகிறது. ரஸ கெந்தக பாஷாணமருந்துகளைப் பாகந்தவறாது நல்ல பாகத்துடன் செய்யின், சித்தர்கள் ஔஷதமாகவேமுடியும். குணம்பெறலாமென்பதும்நிச்சயம்.

பஞ்சகல்ப ஸ்நானப்பொடி.

வெள்ளை மிளகு	பலம்	1
வால்மிளகு	,,	1
ஏலம்	,,	½
பூலாங்கிழங்கு	,,	1

கஸ்தூரி மஞ்சள்	பலம்	$\frac{1}{2}$
வங்காளப்பச்சை	,,	1
நெல்லிவற்றல்	,,	1

வெய்யிலில் வைத்து இடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக் கொண்டு அரைக்கால்படி பசுவின் பாலில் கால் பலம் தூள் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்துக்கொதிக்கவிட்டு சேறுபதத்திலிறக்கிக்கொட்டைப்பாக்களவு பசுவின் வெண்ணெய் போட்டு கலந்து உச்சி உள்ளங்கால் வரை தேய்த்து இளம் வெந்நீர் அல்லது குளிர்ந்த ஜலத்தில் வாரம் இரண்டு முறை ஸ்நானம் செய்துவரவும். சிரங்கு துர்நீர் தலைவலி தீரும். சர்மரோகங்களாகிய வெண்குஷ்டம் கருங்குஷ்டம் கிரந்தி இவைகட்கு உள்ளுக்கு ரசகெந்தகமெழுகு வெளிப் பிரயோகித்து இந்த ஸ்நானமும் செய்துவரக் குணமாகும்.

பவழபஸ்மம்.

கடைகளில் விற்கும் பவழக்கொடி ஒரு பலம் வாங்கி அதை வெள்ளைப் பிங்கானிற் போட்டு எலு

மிச்சம்பழச்சாற்றைப் பிழிந்து, சாறானது பவழத்தின் மேல் ஒருவிரற்கனம் நிற்குமாறு பார்த்து, அப்படியே மூன்றுநாள் வைத்திருந்து நான்காவது நாள் சுத்த ஜலம்விட்டு நன்றாகக்கழுவி வெயிலிற்காயவைக்கவும்.

பிறகு பவழக்கொடியைக் கல்வத்தில் போட்டுப் பொடி செய்துகொண்டு பன்னீர்மரத்தின் இலைகளை யிடித்துப் பிழிந்து வடிகட்டிய சாறு விட்டு இரண்டு சாமமரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண்செய்து 50 வறட்டியிற் புடமிடவும். மறுபடியும் மேற்படியிலைச்சாறு விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முன்போற் சீலைமண் செய்து புடமிடவும். இவ்விதம் மூன்றுபுடமிட பஸ்மமாகும். இது சிறுகறுநிறமான பஸ்மமாகத் தானிருக்கும். அதற்காக அதிகபுடம் போடவேண்டியதில்லை. மருந்து வில்லைகளைக் கல்வத்தில்பொடி செய்து சீசாவிற்பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

உபயோகம்.

மூன்று குன்றிமணியிடைப் பசுவின் வெண்ணெயிற் காலை மாலையுட்கொள்ள அஸ்திகாங்கை

மேகச்சூடு வாய்ப்புண் உந்திப்புண் காஸம் சுவாஸம் நீர்ச்சுருக்கு உஷ்ணசம்பந்தமான ரோகங்கள் யாவும் குணமாகும்.

குறிப்பு:—இலந்தையிலே தேள்கொடுக்கினிலே இவை களையரைத்து அதற்குக்கவசஞ்செய்து (அல்லது மூசை போற் செய்து) அதற்குள் பவழத்தைப் புடம் போட்டாலும் ஒருபுடத்தில் நல்ல வெண் மையாக நீறிவிடும். இம்முறைக்கு இவ்வளவு கஷ்டம் ஏனென்று நினைக்கலாம். இஃதோர் பெரியவருடைய கைம்முறை, குணமதிகம், செய்து அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். நான் இப்பஸ்மத்தை அஸ்தி சுரத்திற்கும் கொடுத்துவந்ததில் நல்ல பலன் கொடுத்திருக் கிறது.

முதற்பாகம் முற்றிற்று.

ஸ்ரீ:

குசேலர்.

ஐந்தங்கமுள்ள அரிய நாடகம்.

இந்தச் சரித்திரம் பாகவதத்திலுள்ள ஒரு உபாக்யானம். தமிழ் வித்வான் தேவராஜபிள்ளையால் இயற்றப்பெற்றுள்ள "குசேலோபாக்யானம்" என்னும் அருமையான நூலை முதநூலாகக்கொண்டு செவ்விய தமிழில் நாடகமாகச் செய்யப் பெற்றிருக்கிறது. உயர்ந்த ஆண்டிக் பேபரில் 200 பக்கங்கள் கொண்ட ஒரு புஸ்தகம் புராதன சரித்திரம் நவீனகொள்கைக் கிணங்க நாடகமாக எழுதப்பெற்றுள்ளது. ஆண்பாலர்க்கும் பெண்பாலர்க்கும் உரிய அரிய தர்மங்களை விளக்குவது இஃது ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டுவது அவச்யம்.

இதன் விலை	ராபர் பைண்டு	ரூ. 1—0—0
	காலிகோ பைண்டு	ரூ. 1—4—0